சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - பார்வைத்திறன் குறையுடையோர் எளிதில் பிரெய்லி முறையில் கற்பதற்கு ஏதுவாக மின்னணு வடிவில் உள்ள புத்தகங்களை தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி (Electronic Braille Reader) - 204 பயனாளிகளுக்கு வழங்குதல் - நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை

அரசாணை (ப) எண்.19

நாள் :23.07.2021
பிலவ, ஆடி 07,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

1. அரசாணை (டி) எண்.40, மாற்றுத்திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள்.29.10.2020
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் கடித எண்.5585/சி.ப.2/2020, நாள்.23.05.2021

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வைத் திறன் குறையுடைய 200 மாணவர்களுக்கு தலா ரூ.35,000/- மதிப்பில் எலக்ட்ரானிக் பிரெய்லி ரீடர் கருவிகள் வழங்க ரூ.70.00 இலட்சம் (ரூபாய் எழுபது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டது. அத்துடன், இந்நேர்வில் தேவையேற்படும் போது நிதி ஒப்பளிப்பு கோரும் கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், மேலும் இந்நேர்வில் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன் படி உரிய விதிமுறைகளை கடைபிடிக்குமாறும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின், கடிதத்தில் மேற்காணும் அரசாணையினை தொடர்ந்து பார்வைத்திறன் குறையுடையோர் எளிதில் பிரெய்லி முறையில் கற்பதற்கு ஏதுவாக மின்னணு வடிவில் உள்ள புத்தகங்களை (e-books) பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி (Electro Braille Reader) என்னும் உயர் தொழில்நுட்ப உதவி உபகரணம் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு, தற்போது தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் 204 எண்ணிக்கையில் (Electronic Braille Reader) கருவிகள் பெறப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

3. எனவே, பார்வைத்திறன் குறையுடைய மாணவர்கள் எளிய முறையில் கல்வி பயில ஏதுவாக மின்னணு வடிவில் உள்ள பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் கருவிகள் (Electronic Braille Reader) ரூ.34,272/- எனும் மதிப்பில் 204 எண்ணிக்கையில் வாங்கியமைக்கு ரூ.69,91,488/-ஐ ஒதுக்கீடு

செய்து உரிய அரசாணை வழங்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அரசினைக் கோரியுள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று பார்வைத்திறன் குறையுடைய மாணவர்கள் எளிய முறையில் கல்வி பயில ஏதுவாக மின்னனு வடிவில் உள்ள பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் கருவிகள் (Electronic Braille Reader) ஒவ்வொன்றும் ரூ.34,272/- என்ற விலையில் கொள்முதல் செய்யப்பட்ட 204 கருவிகளுக்கு ரூ.69,91,488/- (ரூபாய் அறுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து நானூற்று எண்பத்து எட்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 - சமூக நலன் 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - NK - பார்வைத்திறன் குறையுடையோருக்கு எலக்ட்ரானிக் பிரெய்லி ரீடர் கருவிகள் வழங்குதல் - 347 - பண்டகசாலைப் பொருட்களும் சாதனங்களும் 02 - சாதனங்கள்"
IFHRMS DPC : 2235 02 101 NK 34702]
OLD DPC : 2235 02 101 NK 4724]

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.30434/நிதி(சந)துறை/2021. நாள்.22.07.2021-ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35/09.
<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதி (சந/வ.செ.பொது-I)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்